මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: LAE/2025/79 2025.04.30

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## பிரச்சார நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ள அமைதி காலப்பகுதி

வாக்கெடுப்பிற்கு நாற்பத்தெட்டு(48) மணி நேரத்திற்கு முன்னர் அதாவது 2025.05.03 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள்/குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பான அனைத்து பிரச்சார நடவடிக்கைகளும் முடிவுறுத்தப்பட வேண்டும்.

அதன்படி, 2025.05.03 ஆம் திகதி நடைபெறும் இறுதி அரசியல் பிரச்சாரக் கூட்டங்களின் வீடியோ காட்சிகளையும் விபரங்களையும் 2025.05.04 ஆம் திகதியன்று ஒவ்வொரு தொலைக்காட்சி/ வானொலி அலைவரிசையின் ஒரு பிரதான செய்தி அறிக்கையில் மாத்திரம் பிரச்சாரம் செய்வதற்கும், 2025.05.04 ஆம் திகதியன்று வெளியாகின்ற செய்தித்தாள்களில் அக்கூட்டங்களின் புகைப்படங்களையும் அறிக்கைகளையும் வெளியிட முடியுமென்பதை அறிவிக்கின்றேன். ஒவ்வோர் அலைவரிசையோடும் செய்தித்தாளோடும் இணைந்த சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய அனைத்து சமூக ஊடக தளங்களின் நிருவாகிகளுக்கும் இந்த நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும். அதேபோல், இந்த இறுதி பிரச்சாரக் கூட்டங்கள் பற்றிய விபரங்களை பிரசித்தப்படுத்தும்போது அனைத்து கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் ஒத்த சந்தர்ப்பம் கிடைக்கக்கூடிய விதத்தில் செய்தித்தாள்களில் இடம் ஒதுக்கிக் கொடுப்பதுடன், அலைவரிகளிலும் வானலை காலம் ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கின்றேன்.

மேலும், 2025.05.04 ஆம் திகதி அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் அந்நாளுக்குரிய செய்தித்தாள் தலைப்புக்களை முன்வைக்கும்போது நாழிதழ்களின் செய்தித் தலைப்பை மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், செய்தி சார்ந்த வேறெந்த கருத்து/யோசனை அல்லது செய்திக்கு மாற்றமான கருத்து வெளிப்பாடொன்றை அதனைச் சமர்ப்பிக்கும் ஊடகவியலாளர்கள் முன்வைக்கக் கூடாது. அத்துடன், அன்றைய தினம் தாண்டி அதாவது 2025.05.05, 2025.05.06 ஆம் திகதிகளில் செய்தித் தலைப்புக்களை முன்வைக்கும்போது அல்லது வேறு வகையில் எந்தவோர் அரசியல் பிரச்சார செய்தியையும் கட்சியை குழுக்களை/வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பாதிப்புக்கு உள்ளாக்கும் விதத்திலான சமர்ப்பிப்புகளை முன்வைக்காமல் இருக்குமாறு அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக அலைவரிசைகளின் தலைவர்களுக்கும் செய்திப் பிரிவுகளின் தலைவர்களுக்கும் செய்தி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பீட பணிப்பாளர்களுக்கும் தலைமை பதிப்பாசிரியர்களுக்கும் அனைத்து சமூக ஊடக உரிமையாளர்களுக்கும் மேலும் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்